**அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை**

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# அரையாண்டுத்தேர்வு

## 2021/2022

# தமிழ்

## ஆண்டு 5

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்: 12** |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரிக் கோப்புகள்

## பகுதி 1 – எழுதுதல்

**1. பொருத்தமான விடையின் முன் உள்ள கட்டத்தினுள் புள்ளடி (×) இடுக.**

1. இந்தியாவின் தேசியக்கவி எனப் போற்றப்பட்டவர்
   - ☐ இளங்கோவடிகள்
   - ☐ பாரதியார்
   - ☐ திருவள்ளுவர்

2. உயர்திணைச் சொல்
   - ☐ மாணவி
   - ☐ குடை
   - ☐ சிங்கம்

3. ‘குடி’ என்ற வினையடியின் நிகழ்காலம்
   - ☐ குடித்தான்
   - ☐ குடிப்பான்
   - ☐ குடிக்கின்றான்

4. ஔவையார் இயற்றிய நூல்களுள் ஒன்று
   - ☐ மணிமேகலை
   - ☐ மூதுரை
   - ☐ திருக்குறள்

5. சிறுவனுக்கு சிறுமி போல தந்தைக்கு
   - ☐ தாய்
   - ☐ தலைவி
   - ☐ மனைவி

6. தீ என்பதன் ஒத்த பொருட்சொல்
   - ☐ காற்று
   - ☐ நெருப்பு
   - ☐ மலை

7. உயிரினும் மேலானதாகப் பேண வேண்டியது
   - ☐ ஒழுக்கம்
   - ☐ செல்வம்
   - ☐ கோபம்

8. குளிர் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   - ☐ சூடு
   - ☐ நடுக்கம்
   - ☐ பனி

9. கிளி பழத்தைக் கொத்தியது. இச்சொல்லியத்தில் செயப்படுபொருள்
   - ☐ கிளி
   - ☐ கொத்தியது
   - ☐ பழத்தை

10. படிக்கிறன் என்பதன் திருத்தமான வடிவம்
    - ☐ படிக்கிறான்
    - ☐ படிக்கிறேன்
    - ☐ படிப்பேன்

மாதிரித் தேர்வுத்தாள்

11. தமிழர்களின் வீரக்கலைகளுள் ஒன்று

☐ கோலாட்டம் ☐ சிலம்பாட்டம் ☐ காவடியாட்டம்

12. ஆடியும் பாடியும் நடிக்கும் கலை

☐ கூத்து ☐ சிற்பம் ☐ ஓவியம்

13. குடிமக்கள் வாழ்க்கையைக் கதையாகக் கூறும்நூல்

☐ சிலப்பதிகாரம் ☐ நல்வழி ☐ நாலடியார்

14. ஒரு சொல்லியத்தில் கருத்துத் தொடங்கும் இடம்

☐ பயனிலை ☐ எழுவாய் ☐ செயப்படுபொருள்

15. ஏற்றம் என்பதன் எதிர்ப்பொருட்சொல்

☐ உயரம் ☐ இறக்கம் ☐ பள்ளம்

(15×1=15 புள்ளிகள்)

**3. பொருத்தமான முடிக்கும் சொற்களைத் தெரிவுசெய்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| வழிகிறது | வீசுகிறது | சென்றார் | கட்டினார்கள் | படிப்பேன் |

1. நான் தமிழை விரும்பிப் ____________________.
2. அப்பாவின் நெற்றியிலிருந்து வியர்வை ____________________.
3. அம்மா அங்காடிக்குச் ____________________.
4. பூக்களிலிருந்து நறுமணம் ____________________.
5. சிறுவர்கள் கடற்கரையில் மணல்வீடு ____________________.

(5×1=5 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் சொல்லியங்களில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலையைத் தெரிவுசெய்து எழுதுக.**

1. எனது அப்பா செய்தித்தாளை வாங்கினார்.
2. கணினி தன் கதையைக் கூறியது.
3. மருத்துவர் நோயாளியைப் பார்வையிட்டார்.

| இல | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

(9×1=9 புள்ளிகள்)

**4. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| புல்பூண்டு | ஆடிப்பாடி | வளைந்துநெளிந்து |
| இன்பதுன்பம் | பழக்கவழக்கம் | அக்கம்பக்கம் |

1. நாம் ____________________ பார்த்து நடத்தல் வேண்டும்.
2. எமது வாழ்வில் ____________________ மாறிமாறி வரும்.
3. வீட்டைச் சுற்றி ____________________ வளர்ந்துள்ளது.
4. மாணவர்கள் நல்ல ____________________ உள்ளவர்களாக இருக்கவேண்டும்.
5. தொடருந்துப் பாதை ____________________ செல்கிறது.
6. சிறுவர்கள் ____________________ மகிழ்ந்தனர்.

(6×1=6 புள்ளிகள்)

மாதிரி செர்வத்தான்

**5. கீழ்க்காணும் சொற்களை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

1. உணவகம் - ____________________
2. ஆசிரியர் - ____________________
3. நண்பன் - ____________________
4. பெற்றோர் - ____________________
5. காலநிலை - ____________________

(5×1=5 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழ்மொழியின் மூன்று பிரிவுகளும் எவை?

____________________________________________

2. நற்பண்புகள் இரண்டு எழுதுக.

____________________________________________

3. உயர்திணைக்குரிய பால்கள் எவை?

____________________________________________

4. இன்கலைகள் இரண்டு எழுதுக.

____________________________________________

5. கீழ்க்காணும் வினைச்சொற்கள் காட்டும் காலத்தை எழுதுக.

இருந்தாள்: ____________________ பறக்கும்: ____________________

(5×2=10 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**7. கீழ்காணும் தலைப்புகளில் ஒன்றை பற்றி 50 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. பாரதியார்
2. தமிழர்கலைகள்
3. மாலைக்காட்சி

(15 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

## பகுதி – 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மாந்தன் தனது உடலை நலமாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்திருக்க உணவு அகத்தியமானது. அதற்கு நாம் ஊட்டம் நிறைந்த உணவுகளை உண்ணுதல் வேண்டும். அவ்வுணவுகளில் மாச்சத்து, உயிர்ச்சத்துகள், புரதம், கொழுப்பு போன்ற ஊட்டச்சத்துகள் அடங்கியிருத்தல் வேண்டும். கூலங்கள், கிழங்குகள் போன்றவற்றில் மாச்சத்து அதிகம் காணப்படுகிறது. இறைச்சி, பால், முட்டை, மீன் போன்றனவற்றில் புரதம் காணப்படுகிறது. உடல் வளர்ச்சிக்கும் தசைகளின் வளர்ச்சிக்கும் புரதச்சத்து அகத்தியமானது. கொழுப்புச்சத்தானது வெண்ணெய், பாற்கட்டி, எண்ணெய் வகைகள் போன்றவற்றில் அதிகம் காணப்படுகிறது. உயிர்ச்சத்துகள் அதிகளவில் பச்சைக் காய்கறிகள், பழங்கள் போன்றனவற்றில் காணப்படுகின்றன.

1. மாந்தன் தனது உடலைச் சுறுசுறுப்பாக வைத்திருக்க அகத்தியமானது எது?

_______________________________________________

2. நாம் எவ்வகையான உணவுகளை உண்ணுதல் வேண்டும்?

_______________________________________________

3. கிழங்கு வகைகளில் அதிகமாக அடங்கியிருக்கும் ஊட்டச்சத்து எது?

_______________________________________________

4. புரதச்சத்து அடங்கியிருக்கும் உணவுப் பொருட்கள் இரண்டு எழுதுக.

_______________________________________________

5. உயிர்ச்சத்துகள் அதிகளவில் காணப்படும் உணவு வகைகள் எவை?

_______________________________________________

(5×2=10 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**2. கீழ்க்காணும் தகவல்களைப் படித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ( ✓ ) எனவும், பிழையாயின் ( × ) எனவும் அடையாளம் இடுக.**

### அகநிலாவின் ஒருநாள் செயற்பாடு

அகநிலா புதன்கிழமை காலை 6:30மணிக்கு நித்திரை விட்டு எழுந்தாள். 7:15மணிக்கு காலை உணவு உண்டாள். 7:40மணிக்குப் பள்ளிக்குச் சென்றாள். மதியம் 12:25மணிக்கு வீடு திரும்பினாள். 13:30மணிக்குத் தமிழ்ப்பள்ளிக்குச் சென்றாள். 16:30மணிக்கு வீடு திரும்பினாள். 17:15மணிக்கு நீச்சல் பயிற்சிக்குச் சென்றாள். 19:00மணிக்கு வீடு திரும்பினாள். 19:30மணிக்கு இரவு உணவு உண்டாள். 20:00மணிக்கு வீட்டுப் பாடங்கள் செய்தாள். 21:00மணிக்குப் படுக்கைக்குச் சென்றாள்.

1. இது அகநிலாவின் ஒருநாள் செயற்பாடு. ( )
2. 7:40மணிக்கு காலை உணவு உண்டாள். ( )
3. தமிழ்ப்பள்ளி புதன்கிழமையில் நடைபெறுகிறது. ( )
4. அகநிலா நீச்சல் பயிற்சிக்குச் செல்வதில்லை. ( )
5. 21:00மணிக்குப் படுக்கைக்குச் சென்றாள். ( )

(5×1=5 புள்ளிகள்)

மாதிரித் தேர்வு

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 09 | | | |
| 4 | 06 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரிக் கோப்புகள்